S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் ஜனவரி 15 * 2026 * மலர் -1 * இதழ்-228* VOL-1 * ISSUE-228 விலை ரூ.3 * பக்கம் -4



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் வைத்து, தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் கலெக்டர் அலுவலக வளாகத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. கலெக்டர் சரவணன் குடை பிடித்தபடி மாட்டு வண்டியில் சென்றார்.



தென்காசி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்த சமத்துவ பொங்கல் விழாவில் கலெக்டர் கமல்கிஷோர் உறியடிக்கும் போட்டியில் கலந்து கொண்டார்.

# ஈரான் மீது எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்த டிரம்ப் திட்டம்!

**★ இதுவரை 2,500 பேர் படுகொலை;**
**★ டிரம்ப், நெதன்யாகு உண்மையான கொலையாளிகள் என ஈரான் பதிலடி!!**

புது டெல்லி, ஜன.15–

ஈரான் மீது எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. ஈரானில் மக்கள் போராடுவதை தொடர வேண்டும் என்று கூறியுள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப், உங்களுக்கான உதவி வந்து கொண்டிருக்கிறது என்று சூசகமாக கூறியுள்ளார். இந்நிலையில், ஈரானில் நடக்கும் படுகொலைகளுக்கு டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இருவரும் தான் காரணம் என்று ஈரான் அரசு குற்றம் சாட்டியுள்ளது. ஈரானில் நடந்து வரும் வன்முறை போராட்டத்தில் இதுவரை சுமார் 2,500 பேர் பலியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகள் ஏற்படும் என கத்தார், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் எச்சரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 3 வருடங்களில் இல்லாத வகையில் ஈரானில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பணமதிப்பு இழப்பு, பொருளாதார மந்தநிலை அதிகரிப்பு போன்ற காரணங்களால் அரசுக்கு எதிரான அதிருப்தி அலை அங்கு வீசுகிறது. ஈரான் உச்ச தலைவர் அயதுல்லாஅலிகமேனிக்கு எதிராக கடந்த மாதம் 28ம் தேதி முதல் மக்கள் போராட்டம் நடைபெற்று வருகிறது. ஈரானில் மக்கள் போராட்டம் தொடங்கிய நிலையில் தலைநகர் தெஹ்ரானில் அலை அலையாக மக்கள் வீதிகளில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். , தொழிலாளர்கள், மாணவர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் போராட்டத்தில் பங்கெடுத்து வருகின்றனர். தற்போதுள்ள சூழலில் ஈரானில் ஆட்சி கவிழ்ந்தால் தங்கள் நாட்டிலும் அத்தகைய அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தில் இஸ்லாமிய நாடுகள் உள்ளன. போராட்டத்தை கமேனி தலைமையிலான அரசு ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. போராட்டக்காரர்களை சுட்டுக்கொல்லும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. அரசுக்கு எதிராக நடந்துவரும் போராட்டத்தில் இதுவரை 2,500 உயிரிழந்துள்ளனர். உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை பல மடங்கு அதிகம் என்று கூறப்படுகிறது. மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை ஈரான் அரசு கைது செய்துள்ளது. , ஈரானில் போராடி வரும் மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் ஆதரவு அளித்துள்ளார்.

ஈரானில் நடக்கும் போராட்டத்தின் பின்னணியில் வெளிநாட்டு சதி இருப்பதாகக் கூறி வன்முறையாளர்களை ஒடுக்க ஈரான் அரசு பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. அதே சமயம், ஈரானில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை கொலை செய்தால் ஈரான் அரசு மீது கடுமையான நடவடிக்கை அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மையில், ஈரானின் இஸ்லாமிய குடியரசு ஒளிபரப்பு கட்டடத்தில்புகுந்துசூறையாடிய



வன்முறை கும்பல், அந்த கட்டடத்திற்கு தீ வைத்தனர். தற்போது ஈரானில் வன்முறை போராட்டம் 31 மாகாணங்களில் பரவியுள்ளது. ஈரானில் போராட்டக்காரர்கள் தூக்கிலிடப்படுவதாக குற்றம் சாட்டியுள்ள டிரம்ப், தவறு செய்தவர்கள் பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளார். மேலும் ஈரான் மக்களுக்கான உதவி வந்து கொண்டிருப்பதாக டிரம்ப் கூறியுள்ளார். இதையடுத்து ஈரான் மீது அமெரிக்கா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது ட்ரூத் சமூகவலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியதாவது, ஈரான் நாட்டு மக்களே தொடர்ந்து போராடுங்கள். உங்கள் அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் கொலைகாரர்கள், அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்களின் பெயர்களை குறி த்துவை த்துக்கொள்ளுங்கள். அவர்கள் அதிக விலை கொடுக்கப்போகிறார்கள். போராட்டக்காரர்களை அர்த்தமற்ற முறையில் படுகொலை செய்வது நிறுத்தப்படும்வரை ஈரான் அதிகாரிகளுடனான அனைத்து சந்திப்பையும் நான் ரத்து செய்துள்ளேன். உங்களுக்கான உதவி வந்து கொண்டிருக்கிறது' இவ்வாறு கூறியுள்ளார். மேலும் ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப் போவதாகவும் டிரம்ப் அறிவித்துள்ளார். டிரம்ப் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ள ஈரான், ஈரானில் நடைபெறும் வன்முறை சம்பவங்களுக்கும், உயிரிழப்புகளுக்கும் அமெரிக்காவும், இஸ்ரேலும் தான் காரணம் என்றும், அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இருவரும் தான்உண்மையானகொலையாளிகள் என்று காட்டமாக கூறியுள்ளது.

ஈரானில் நடைபெற்று வரும் உள்நாட்டு போராட்டங்களை காரணமாக காட்டி, மீண்டும் ராணுவ நடவடிக்கையை முன்னெடுக்க முயற்சித்தால் கடுமையானவிளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## அறிவிப்பு

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு (16,17) 2 நாட்கள் விடுமுறை. எனவே அடுத்த இதழ் வழக்கம் போல் 18.1.2026 ஞாயிற்றுக்கிழமை வெளிவரும்.

-நிர்வாகி.

# ஏற்காட்டில் லாட்ஜில் கள்ளக்காதலி கழுத்தை நெரித்துக் கொலை!

## 'பேஸ்புக்' மூலம் பழகிய வாலிபர் கைது!!

சேலம்,ஜன.15

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை தெப்பக்குட்டை பகுதியை சேர்ந்த கோவிந்தசாமி மகன் பார்த்திபன், 35. எலக்ட்ரிசியன். திருமணமாகி மனைவியுடன் வாழ்ந்து வரும் இவருக்கும் தர்மபுரி மாவட்டம் ஏரியூர் ஏர்கோல்பட்டி பகுதியை சேர்ந்த கோவிந்தராஜ் மனைவி சாலா, 33 என்பவருக்கும் பேஸ்புக் மூலம் தொடர்பு ஏற்பட்டுள்ளது. கணவனை விட்டு பிரிந்து வாழ்ந்த சாலாவுக்கு 15வயதில் மகனும், 13வயதில் மகளும் உள்ளனர். இந்த நிலையில் இவர்கள்இருவரும்கடந்த 3 ஆண்டுகளாக அடிக்கடி ரகசியமாக சந்தித்து பேசியுள்ளனர். அதை தொடர்ந்து நேற்று காலை 10 மணிக்கு ஏற்காடு வந்த பார்த்திபன் மற்றும் சாலா தனியார் தங்கும் விடுதி ஒன்றில் அறை எடுத்து இருவரும் உல்லாசமாக இருந்துள்ளனர். இந்த நிலையில் இருவருக்கும் தகராறு ஏற்பட்டு பார்த்திபன் சாலாவை கழுத்தை நெரித்து கொலை செய்தார். பிறகு தனது ஊருக்கு சென்று தனக்கு தெரிந்த





வக்கீல் ஒருவருக்கு போனில் தொடர்பு கொண்டு, தான் ஒரு பெண்ணுடன் ஏற்காடு வந்ததாகவும் அங்கு அந்த பெண்ணை கொலை செய்து விட்டதாகவும் கூறியதாக அந்த வக்கீல் ஏற்காடு போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அந்த தகவலை தொடர்ந்து ஏற்காடு போலீசார் வக்கீல் கூறிய தங்கும் விடுதிக்கு சென்று சோதனை செய்ததில் அங்கு அறை ஒன்றில் சாலா அரை நிர்வாணமாக இறந்த நிலையில் கிடந்துள்ளார்.

அதை தொடர்ந்து சாலாவின் உடலை கைப்பற்றிய ஏற்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து பின்னர் அவரது உடலை சேலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். அதை தொடர்ந்து தனது ஊரில் தலை மறைவாக இருந்த பார்த்திபனை ஏற்காடு போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர். அதில் கடந்த 3 ஆண்டுகளாக சாலாவுடன் பழகி வந்ததாகவும் நேற்று தாங்கள் இருவரும் ஏற்காட்டில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் உல்லாசமாக இருக்கும்போது சாலா தன்னிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்ததால் கழுதை நெறித்து கொலை செய்ததாக பார்த்திபன் கூறியதாக போலீசார் தெரிவித்தனர். இந்த கொலை குறித்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.





சேலம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில், சமத்துவ பொங்கல் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அமைச்சர் ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, குத்துவிளக்கேற்றி பொங்கல் விழாவை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி தலைமையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில், அனைவரையும் உற்சாகப்படுத்தும் வகையில் தானும் போட்டியில் கலந்து கொண்டார்.



## கிரெடிட் ஆக்சஸ் கிராமீன் லிமிடெட் நிறுவனம் பேரிகார்ட் தடுப்புகள், நாற்காலிகள், மின்விசிறிகளை பரிசாக வழங்கியது!

வாணியம்பாடி.ஜன.15

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி கிரெடிட் ஆக்சஸ் கிராமீன் லிமிடெட் கம்பெனியின் மூலம்.பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) செயல்பாட்டின் அடிப்படையில் அம்பலூர், ஆலங்காயம்,ஜமனாமத்தூர், காவலூர் என நான்கு காவல்நிலையங்களுக்கும் தலா 10 பேரிகார்ட் தடுப்புகள், 20 பிளாஸ்டிக் நாற்காலிகள், 5 மின்விசிறிகள்எனவழங்கபட்டது, இந்நிகழ்வு அம்பலூர் காவல் துணை ஆய்வாளர்கள் சந்திரசேகர் மற்றும் ராஜா, முன்னிலை யிலும்,ஆலங்காயத்தில் காவல் ஆய்வாளர் உலகநாதன், காவல் உதவி ஆய்வாளர் மதியலகன் முன்னிலையிலும், காவலூரில் காவல் துணை ஆய்வாளர் நாசி,முன்னிலையிலும்,நடைபெற்றது,மேலும் கிரெடிட் ஆக்சஸ்கிராமீன்லிமிடெட்திருப்பத்தூர் பிரிவு. கோவிந்தராஜ்.கோட்ட மேலாளர், முத்துவிநாயகம். பகுதி மேலாளர், பாபு.எஸ் கிளை மேலாளர், ஹரிபாபு கிளை மேலாளர், சுகந்தி கிளை மேலாளர்,அரவிந்த் கிளைமேலாளர், விக்டர். திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ஆகியோர் கலந்து கொண்டு நான்கு இடங்களிலும் பொருட்களை வழங்கி சிறப்பித்தானர். மேலும் அம்பலூர்,ஆலங்காயம், காவலூர் காவல்நிலையத்தினர் கிரெடிட் ஆக்சஸ் கிராமீன் லிமிடெட் நிறுவனத்தின் இந்த பெருநிறுவன சமூகப் பொறுப்பு பங்களிப்பை பெரிதும் பாராட்டியதுடன், இந்த அர்த்தமுள்ள ஆதரவிற்காக.கிராமீன் கூட்டாவிற்கு.நன்றி தெரிவித்தும், எதிர்கால நலத்திட்டங்களுக்கும், முயற்சிகளுக்கும்தொடர்ச்சியானபங்களிப்பை வழங்குமாறு கோரினர். மேலும் பெரு நிறுவன சமூகப் பொறுப்பு முன்னெடுப்பின் ஒரு பகுதியாக மரக் கன்றுகள் நடபட்டது.



## தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம் சார்பில் 6-ம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா!

உளுந்தூர்பேட்டை, ஜன.15

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் ஒற்றுமை, சமத்துவம், பாரம்பரியம் வெளிப்படுத்திய சிறப்பான கொண்டாட்டம் தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம் சார்பில், 6ஆம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா உளுந்தூர்பேட்டையில் விமரிசையாக நடைபெற்றது. சமூகத்தில் சமத்துவம், ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தை வலியுறுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த விழா, இவ்வாண்டும் பொதுமக்களின் பெரும் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக உளுந்தூர்பேட்டை ஸ்ரீ சாரதா ஆசிரமத்தின் அம்பா அவர்கள், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன், உளுந்தூர்பேட்டை நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, நகர மன்ற துணைத் தலைவர் வைத்தியநாதன், அகில பாரத இந்து மகா சபா மாநில தலைவர் பெரி.செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவ பொங்கல் அடுப்பேற்றி, சாதி, மத, வேறுபாடுகளைத் தாண்டி பொங்கல் பண்டிகையை கொண்டாடினர். இதில் துப்புரவு பணியாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு, சமத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

பொங்கல் பண்டிகை என்பது உழைக்கும் மக்களை போற்றும் திருவிழா என்றும், சமூகத்தின் அனைத்து தரப்பினரும் சமமாக இணைந்து கொண்டாட வேண்டிய பண்டிகை என்றும் விழாவில் பேசிய சிறப்பு அழைப்பாளர்கள் கருத்து தெரிவித்தனர். பத்திரிகையாளர்கள் சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் பணியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

பாரம்பரிய முறையில் பொங்கல் சமைத்து, அனைவருக்கும் வழங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் மக்களின் உற்சாக பங்கேற்புடன் நிறைவு பெற்றது. சமூக சமத்துவத்தை வலியுறுத்தும் இந்த சமத்துவ பொங்கல் விழா, உளுந்தூர்பேட்டை பகுதியில் பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது.

# பாலக்கோடு அருகே அரசு பள்ளியில் நள்ளிரவில் திருட்டு!

பாலக்கோடு, ஜன.15



தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு, அடுத்த எர்ரனஅள்ளியில் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது, இங்கு 203 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக மலர்கொடியும், சத்துணவு அமைப்பாளராக ராதா என்பவரும் பணியாற்றி வருகின்றனர். பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை பள்ளி முடிந்து சமையலறை மற்றும் பள்ளியை மூடி பூட்டி விட்டு சென்றனர்.

இன்று காலை பள்ளிக்கு சென்ற சத்துணவு அமைப்பாளர் ராதா பள்ளியின் மெயின் கேட் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தவர், இது குறித்து பாலக்கோடு போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

போலீசார் பள்ளிக்கு சென்று பார்த்ததில் சமையல் அறையின் கதவு உடைக்கப்பட்டு சமையல் பொருட்கள் திருடு போனது தெரிய வந்தது, இதில் கோதுமை ரவை, அரிசி, பருப்பு, சேமியா, எண்ணெய் , சமையல் செய்யும் பாத்திரங்கள், கேஸ் சிலிண்டர், கேஸ் ஸ்டவ் உள்ளிட்டவைகளுடன் மாணவர்கள் உணவு உண்ண வைத்திருந்த சில்வர் தட்டுக்கள் என சுமார் 50 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை திருடி சென்றது தெரிய வந்தது, உடனடியாக காலை உணவு சமைக்க வாடகை சிலிண்டர் மற்றும் ஸ்டவ் வரவழைக்கபட்டு மாணவர்களுக்கு உணவு தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இது குறித்து பாலக்கோடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

பாலக்கோடு சுற்று வட்டார பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் தொடர்ந்து லேப்டாப், கம்ப்யூட்டர், பிரிண்டர் திருடப்பட்டு வந்த நிலையில் சமையல் பொருட்களையும் திருடர்கள் விட்டு வைக்காமல் தொடர் கொள்ளையில் ஈடுபட்டு வருவது பொது மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## வாணியம்பாடி அடுத்த மேட்டுப்பாளையத்தில் தி.மு.க. சார்பில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா!



வாணியம்பாடி ஜன.15

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த மேட்டுப்பாளையம் தனியார் மண்டபத்தில், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி.எஸ்.ஞான வேலன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கினார்.

இதில் கிளை கழக செயலாளர்கள், கிளைகழக பிரதிநிதிகள், பாக முகவர்கள் ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் என, 520 நபர்களுக்கு பட்டு புடவை, பட்டு வேஷ்டி,சட்டை, கலண்டர், சால்வை மற்றும் பொங்கல் சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒன்றியநிர்வாகிகள், அணிகளின்அமைப்புக்கள், கிளை கழக நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

முடிவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஞானசேகரன் கூறினார்.

### கோவை மாநகர பகுதியில்

# போதைப் பொருட்கள் விற்பனையை தடுக்க சிறப்பு குழு அமைப்பு!

## போலீஸ் கமிஷனர் தகவல்!!

கோவை,ஜன.13–

கோவை மாநகர போலீஸ் கமிஷனர் கண்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவை மாநகர பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளோம். பொது மக்கள் வெளியூருக்கு எவ்வித சிரமமும் இல்லாமல் பயணம் செய்ய 7 பஸ்நிலையங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒப்பணக்கார வீதி, கிராஸ்கட் வீதி, பெரியகடை வீதியில் கோபுரங்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் அங்கு திருட்டு,வழிப்பறி நடைபெறுவதை தடுக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது,பொங்கல்பண்டிகையையொட்டி நாளை ( புதன்கிழமை ) நடைபெறும் வாரச்சந்தைகளில் கூட்டம் அதிகமாககூடும், எனவே அங்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது, மாநகரில் மக்கள் அதிகம் கூடும் 15 இடங்கள், பிரச்சனைக்குரிய 6 இடங்கள் கண்டறியப்பட்டுஉள்ளது. அந்த பகுதிகளில் கூடுதல் போலீசார் நியமிக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளனர், பொங்கல் பண்டிகையையொட்டி கோவையில் 1,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள், சைபர் மோசடியில் ஏ பி கே என்று ஒரு லிங்க்அனுப்பி மோசடி செய்யப்பட்டு வருகிற அது போன்ற லிங்க யாரும்அனுப்பினால் அதற்குள் செல்லக் கூடாது, கோவையில் தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் வந்து கொண்டு இருக்கிறது, இது போல் சென்னை மற்றும் பிற மாநிலங்களுக்கும் மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது, இதில் தமிழகத்தை சேர்ந்த நபர்கள் தான் ஈடுபட்டு வருகிறார்கள், இது தொடர்பாக தீவிரவாத தடுப்பு பிரிவுக்கு தகவல் அனுப்பி உள்ளோம்.

அவர்களுடன் சேர்ந்து நாங்களும் விசாரணை நடத்தி வருகிறோம், அதில் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது போதைப் பொருட்கள் விற்பனையை தடுக்க தீவிர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம், இதற்காக போதைப் பொருள் ஒழிப்பு தடுப்புக்குழு என்ற சிறப்பு குழு அமைக்கப்பட்டு உள்ளது. போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு போலீஸ் கமிஷனர் கண்ணன் கூறினார்,அப்போது துணைகமிஷனர்கள் தேவநாதன், கார்த்திகேயன், திவ்யா ஆகியோர் உடன் இருந்தனர்.



தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சமூக நலத்துறையின் சார்பில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட உள்ள சமையல் பாத்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், பார்வையிட்டு, பாத்திரங்களின் தரம் மற்றும் உறுதிதன்மை குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள். உடன் மொரப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சத்யா,ஜெகதீசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.








### பொறியியல், மருத்துவம்,ஒலிம்பியாட் துறைகளில்

## கோயம்புத்தூரின் சிறந்த மாணவர்களுக்கான அலன் கரியர் இன்ஸ்டிட்யூட் SOPAN 2025 பாராட்டு விழாவை!

கோயம்புத்தூர், ஜன.15

பொறியியல் மற்றும் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் சிறப்பாக சாதித்து முன்னணி தேசிய கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற கோயம்புத்தூரின் சிறந்த மாணவர்களை கௌரவித்தது. இந்த நிகழ்ச்சி, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைந்துள்ள டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரங்கில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் சாதனையாளர்கள் ஒன்றிணைந்தனர்ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மதிப்புமிக்க கல்விப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு ஆலன் கோயம்புத்தூர் ஒரு சிறந்த வழிகாட்டுதல் தளத்தை வழங்குகிறது. இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் பொறியியல், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் மாணவர்கள் பெற்ற அபூர்வமான சாதனைகளை பதிவு செய்தது. இதில் 16 மாணவர்கள் IITகளில், 27 மாணவர்கள் NITகளில், 10 மாணவர்கள் IIITகளில், 2 மாணவர்கள் BITSஇல், 1 மாணவர் IISTஇல், 3 மாணவர்கள் IISERகளில், 10 மாணவர்கள் VITஇல் சேர்க்கை பெற்றனர். மேலும், 90 மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரியிலும் 170 மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர். இந்த விழாவில் விருந்தினர்களாக, சக்தி கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் ஈ.ஆர். தீபன் தங்கவேலு, பிருந்தாவன் வித்யாலயாவின் தாளாளர் மற்றும் முதல்வர் வனிதா திருமூர்த்தி, கோவை வித்யாஷ்ரமத்தின் தாளாளர் மற்றும் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ்.பி. தேன்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ட்ரீம் டெக்னாலஜியின் குடியரசு தின சலுகைகள்:

## அமேசான் ஸ்மார்ட் ஹோம் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தயாரிப்புகளுக்கு 72% வரை தள்ளுபடி!

சென்னை, ஜன.15



உலகளாவிய பிரீமியம் ஸ்மார்ட் ஹோம் உபகரண நிறுவனமான ட்ரீம் டெக்னாலஜி, குடியரசு தினத்தை முன்னிட்டு அமேசான் இந்தியாவில் நடைபெறும் “கிரேட் ரிபப்ளிக் டே” விற்பனைவிழா(ஜனவரி16–22)மூலம்அதன்தயாரிப்புகளுக்கு அதிகபட்சம் 72% வரை தள்ளுபடி வழங்குகிறது. ரோபோடிக் வாக்கூம், கம்பியில்லா ஸ்டிக் வாக்கூம், வெட் & ட்ரை கிளீனர்கள் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தயாரிப்புகள் இந்த சலுகையில் இடம்பெறுகின்றன.இந்த குறுகிய கால சலுகை அமேசான் இந்தியா தளத்திலும், நாடு முழுவதும் 20க்கும் மேற்பட்ட நகரங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட Croma ஸ்டோர்களிலும் கிடைக்கிறது. அன்றாட வாழ்க்கையை எளிதாக்கும் அறிவுசார்ந்த தொழில்நுட்பங்களை நுகர்வோருக்கு எளிதாக அணுகக்கூடியதாக மாற்றுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். மேலும், 60க்கும் மேற்பட்ட Croma ஸ்டோர்களில் அமைக்கப்பட்டுள்ள ‘ட்ரீம் ஜோன்ஸ்’ மூலம் நேரடி டெமோக்களையும் வாடிக்கையாளர்கள் அனுபவிக்கலாம். இதுகுறித்து ட்ரீம் டெக்னாலஜி இந்தியாவின் மேலாண்மை இயக்குநர் திரு. மனு சர்மா கூறுகையில், “புதிய தொடக்கங்கள் என்பது வாழ்க்கையை எளிதாக்குவதிலிருந்தே ஆரம்பமாகிறது. புதிய ஆண்டில் நுகர்வோர் எங்களின் ஸ்மார்ட் லிவிங், கிளீனிங் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தீர்வுகளை சிறந்த மதிப்பு, சேவை மற்றும் நீண்டகால ஆதரவுடன் மேலும் எளிதாக அணுகும் வகையில் இந்த சலுகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன,”

## பொங்கல் பண்டிகை பயணத்தை முன்னிட்டு தமிழகத்தில் பேருந்து முன்பதிவுகள் 81% அதிகரிக்கும்: ரெட்பஸ் கணிப்பு!

சென்னை, ஜன.15




பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் நகரங்களுக்கு இடையிலான பேருந்து பயணங்கள் கணிசமாக அதிகரித்து வருகின்றன. ரெட்பஸ் (redBus) தளத்தின் முன்கணிப்பு தரவுகளின்படி, 2026 பொங்கல் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து மேற்கொள்ளப்படும் பேருந்து முன்பதிவுகள் 81 சதவீதம் வரை உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பகுப்பாய்வு, 2026 ஜனவரி 9–18 காலகட்ட முன்பதிவுகளை கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு, பண்டிகைக்காக வீடு திரும்பும் பயணங்கள், குடும்ப சந்திப்புகள் மற்றும் குறுகிய தூர ஓய்வு சுற்றுலா பயணங்கள் அதிகரித்திருப்பதை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, பயணிகள் முன்கூட்டியே திட்டமிட்டு, இன்டர்சிட்டி பேருந்து சேவைகளை அதிகம் தேர்வு செய்கிறார்கள்என்பதையும்இந்ததரவுகள்சுட்டிக்காட்டுகின்றன. சென்னை–பெங்களூர், கோயம்புத்தூர்–பெங்களூர், சென்னை–மதுரை போன்ற வழித்தடங்களில் அதிக பயண நெரிசல் பதிவாகியுள்ளது.இதுகுறித்து ரெட்பஸ் நிறுவனத்தின் பேச்சாளர் கூறுகையில், “பொங்கல் பண்டிகை என்பது குடும்பங்கள் ஒன்றிணையும் முக்கிய தருணம். இந்த காலகட்டத்தில் பேருந்துகள் பாதுகாப்பான, வசதியான மற்றும் நம்பகமான பயணத் தேர்வாக தொடர்ந்து திகழ்கின்றன. அதிகரித்து வரும் தேவையை கருத்தில் கொண்டு, பயணிகள் எளிதாகவும் குறைந்த செலவிலும் பயணங்களை திட்டமிட ‘டிஸ்கவர் பாரத்’ போன்ற சிறப்பு சலுகைகளை வழங்கி வருகிறோம்,” என்றார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள், மேயர் ஆர்.பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி, வி.க.நகர் மண்டலம், வார்டு74, கிருஷ்ணதாஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநங்கைகள் மற்றும் 250 வாகன ஓட்டுநர்களுக்கு உட்பட 650 நபர்களுக்கு சமத்துவ பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வி.க.நகர்சட்டமன்றஉறுப்பினர்தாயகம்கவி,மண்டலக்குழுத்தலைவர்சரிதாமகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக, பால்வளத் துறையின் கீழ் நவீன நுண்ணுயிரியல் ஆய்வக கட்டடத்தை திறந்து வைத்ததை தொடர்ந்து, தருமபுரி மாவட்டகூட்டுறவுபால்உற்பத்தியாளர்கள்ஒன்றியவளாகத்தில்புதியதாககட்டப்பட்டுள்ள நவீன நுண்ணுயிரியல் ஆய்வக கட்டடம் திறந்து வைக்கும் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ.சதீஸ், கலந்து கொண்டு, குத்து விளக்கேற்றி வைத்து, பார்வையிட்டார்கள்.




கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நடமாடும் பல் மருத்துவ வாகனத்தின் சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் கிரியப்பனவர் துவக்கி வைத்தார்.



தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவினை மாநகராட்சி ஆணையாளர்மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில், மாண்புமிகு மேயர் தி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

# ஆம்பூரில் புதிதாக திறக்கப்பட்ட அரசு மதுபான கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் போராட்டம்!



ஆம்பூர்.ஜன.15

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் நகர பகுதிக்குட்பட்ட பெத்லேகம், ரெட்டி தோப்பு, எம்.வி.சாமிநகர், கம்பி கொல்லை உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

மேலும் அப்பகுதியில் பள்ளிகள், தேவாலயங்கள் கோயில்கள், இரயில் நிலையம் குடியிருப்பு பகுதிகள் என மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதியாக உள்ளது. இந்த நிலையில் அப்பகுதியில் ஏற்கனவே மதுபான கடை அமைப்பதாக தகவல் வெளியானதையடுத்து அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் ஆகியோரிடம் அரசு மதுபான கடை அமைப்பதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என கோரிக்கை வைத்து மனு அளித்த போது மதுபான கடை வராது என உறுதி அளித்து உள்ளனர் .

தற்போது அப்பகுதி மக்களுக்கு தெரியாமல் வெளியில் ஜூஸ் கடை என பெயர் பலகை வைத்துவிட்டு உள்ளே அரசு மதுபான கடை இயங்கி வந்தது தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து புதிதாக திறக்கப்பட்ட அரசு மதுபான கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் கடையை முற்றுகையிட்டு ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு நகர போலீசார் விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கடையை மூடுவதாக உறுதி அளித்து கடையை மூடிய பின்னர் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். பொதுமக்களின் எதிர்ப்பை மீறி மீண்டும் கடை திறந்தால் அதிக அளவில் மக்களை திரட்டி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

# தாளவாடி அருகே மர்ம விலங்கு தாக்கி 3 ஆடுகள் பலி!

சத்தியமங்கலம்,ஜன.15–

தாளவாடி அருகே ஒசூர் செல்லும் ரோட்டில் வசித்து வருபவர் காமில் ஷெரீப், இவர் ஆடுகள் வளர்த்து வருகிறார். நேற்று முன்தினம் வழக்கம் போல ஆடுகளை மேய்த்து வீட்டில் கட்டி வைத்து உள்ளார். பின்னர் காலையிலிருந்து ஆட்டு கொட்டகைகள் பார்த்தபோது மூன்று ஆடுகள் இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இச்சம்பவம் குறித்து தாளவாடி வளத்துறை



யினருக்கு செரீப் தகவல் அளித்தார். சம்பவயிடத்திற்கு சென்ற வனத்துறையினர் ஆடுகள் இறந்தது குறித்து விசாரனை நடத்தி வருகின்றனர். மேலும் ஊருக்குள் நுழைந்த மர்ம விலங்கை கண்டறிந்து கூட்டு வைத்து பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தாளவாடி பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஈரோட்டில் ஏ.டி.எம். எந்திரங்களை உடைத்து கொள்ளை முயற்சி!

ஈரோடு, ஜன.15–

ஈரோட்டில் இரண்டு ஏடிஎம் மையங்களின் இயந்திரங்களை உடைத்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட 2 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.

ஈரோடு, ஈவிஎன் சாலையில் தேசியமயமாக்கப்பட்ட இரண்டு வங்கிகளின் ஏடிஎம் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரவு நேர காவலாளிகள் இல்லாமல் செயல்பட்டு வரும் இந்த மையங்களில் அதிகாலை 2 மணியளவில் புருந்த மர்ம நபர்கள், ஏடிஎம் இயந்திரங்களை கல்லால் உடை த்து பணத்தை கொள்ளையடிக்க முயன்றுள்ளனர்.

எச்சரிக்கை மணி ஒலித்ததையடுத்து, அவர்கள் அங்கிருந்து தப்பியுள்ளனர். ஏடிஎம் மையத்தில் அலாரம் ஒலித்ததை தொடர்ந்து வங்கி ஊழியர்கள் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த ஈரோடு டவுன் மற்றும் தெற்கு போலீஸார் ஏடிஎம் இயந்திரங்கள் சே தமாகி இருப்பதை அறிந்தனர். இதையடுத்து, அங்கிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளைக் கைப்பற்றியும், தடயங்களைக் கைப்பற்றியும் விசாரணை நடத்தினர்.

இதில், பணம் எதுவும் கொள்ளைபோகவில்லை என்பதும், கொள்ளை முயற்சியில் 2 பேர் ஈடுபட்டதும், அதில் ஒருவர் பழைய குற்றவாளி என்பதும் தெரியவந்தது. அவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.



# குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்!

திருப்பூர், ஜன.15–

திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை சார்பாக கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இவ்விழாவில் ,தொழிலாளர் உதவி ஆய்வாளர் சு. காயத்ரி, துணை ஆய்வாளர் இரா. பேச்சிமுத்து ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகளுக்கு கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் அதனுடைய சட்டத்திட்டங்கள் குறித்து விளக்கமளித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தினர். விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் டி.வசந்தி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்,

கல்லூரி நிர்வாக அலுவலர் என். நிர்மல் ராஜ் முன்னிலை வகித்தார், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனிவர் .கோமதி நன்றி உரை வழங்கினார். மேலும் நாட்டுநலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.நிர்மலாதேவி, கோமளவல்லி, பாரதி ஆகியோர் ஒருங்கிணைத்து விழா ஏற்பாடுகள் செய்திருந்தனர்.



# விவேகானந்தரின் 163-வது ஜெயந்தி விழா!

கோவை, ஜன.15–

இந்து முன்னணி கோவை தெற்கு மாவட்டம் மதுக்கரை மற்றும் கிணத்துகடவு தாலுகா மையமாக உள்ள ஒன்றியங்களின் சார்பில் வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 163வது ஜெயந்தி விழாவை தேசிய இளைஞர் தினம் மற்றும் போதை இல்லா தமிழகம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி மலுமிச்சம்பட்டி பகுதியில் நடைபெற்றது. மலுமச்சம்பட்டி பகுதியில் விவேகானந்தர் படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செய்யப்பட்ட பின்னர் சுவாமி விவேகானந்தரின் லட்சியம் மற்றும் அவர் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் முறை, இளைஞர்கள் மத்தியில் தேசபக்தி ஒழுக்கம் பெண்களை போற்றி வாழ்வது போன்ற விசயங்களை எடுத்துரைக்கப்பட்டது.மேலும், தற்போது இளைஞர்கள் மத்தியில் நிலவும் போதை கலாச்சாரத்தால் குடும்பங்களின் மத்தியில் ஏற்படும் பாதிப்புகளையும், போதை இல்லாதமிழகம் உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சி மாவட்ட பொது செயலாளர் கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.



# கௌதம் கோயல் தலைமையில் பொங்கல் விழா!

சேலம், ஜன.15

சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் தலைமையில், வின்சென்ட் பகுதியில் உள்ள, மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில், காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் தனது குடும்பத்தாருடன், தமிழர்களின் பாரம்பரிய உடையான, வேஷ்டி சட்டை அணிந்து, மாட்டு வண்டியில் மைதானத்தை வளம் வந்து, பொங்கல் விழாவினை துவக்கி வைத்தார். மேலும் காவலர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் பங்கேற்ற பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து, அனைவரையும் உற்சாகப்படுத்தும் வகையில், குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, வேத மந்திரம் முழங்க தனது குடும்பத்தாருடன் பொங்கல் வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாவட்ட காவல் துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்களது குடும்பத்துடன் விழாவில் உற்சாகத்துடன் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட கண்காணிப்பாளர் கூறும் போது, மாவட்டம் முழுவதும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பலத்த காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் பொங்கல் விழாவினை, பாதுகாப்புடன் மகிழ்ச்சியுடனும், கொண்டாட வேண்டும் என்றும், அனைவருக்கும் தனது உங்கள் நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்வதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கௌதம் கோயல் தெரிவித்தார்.

# தட்கல் முறையில் விண்ணப்பித்தவர்களுக்கு விவசாய மின் இணைப்புகள் வழங்க வேண்டும்!

## சு.பழனிசாமிகோரிக்கை!!

கோவை,ஜன.15–

தட்கல் முறையில் விண்ணப்பித்தவர்களுக்குவிவசாயமின்இணைப்புகள் காலதாமதமின்றி உடனே கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் சு.பழனிசாமி மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:–

கோவை மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து விவசாயம் செய்து வருகின்றனர். இந்த கிணறுகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கக் கோரி தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தில் விவசாயிகள் விண்ணப்பித்தால் நீண்ட காலம் தாமதம் ஏற்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு தட்கல் முறையை அறிமுகப்படுத்தியது. இதில் விவசாயிகள் ஆழ்குழாய் கிணறு அமைக்க தட்கல் முறையில் விண்ணப்பிக்கும் போது 5 எச் பி மின் இணைப்பிற்கு பணம் கட்டி வருகின்றனர்.

இந்த கிணறுகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கக் கோரி தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தில் விவசாயிகள் விண்ணப்பித்தால் நீண்ட காலம் தாமதம் ஏற்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு தட்கல் முறையை அறிமுகப்படுத்தியது.

இதில் விவசாயிகள் ஆழ்குழாய் கிணறு அமைக்க தட்கல் முறையில் விண்ணப்பிக்கும் போது 5 எச் பி மின் இணைப்பிற்கு ரூ. 2.50 லட்சம்,7.5 எச் பி மின் இணைப்பிற்கு ரூ.2.75லட்சம் மற்றும்10 எச் பி மின் இணைப்பிற்கு ரூ.3லட்சம் தொகை செலுத்தினால் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும்.என அறிவித்தது, இதனைத் தொடர்ந்து கோவை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தட்கல் முறையில் விண்ணப்பித்து குறிப்பிட்டதொகையும் செலுத்தியுள்ளனர். ஆனால் இந்த ஆண்டு தமிழக அரசு தடகல் முறையில் விண்ணப்பிக்கப்பட்ட விவசாய மின் இணைப்புகளில் 10 ஆயிரம் இணைப்புகள் மட்டுமே விடுவிக்க அரசாணை பிறப்பித்துள்ளது.

கடந்த 2025 டிசம்பர் 3 ந் தேதி வரை மாநிலம் முழுவதும் சுமார்44,500 விவசாயிகள் தட்கல் முறையில் மின் இணைப்பு வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

எனவே, தட்கல் முறையில் விவசாய மின் இணைப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கால தாமதமின்றி மின் இணைப்பு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு விசாயிகள் சங்கத் தலைவர் சு,பழனிசாமி மனுவில் தெரிவித்துள்ளார்.




## அடிப்படை பணிகள் தாமதம்:

# திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் அ.தி.மு.க. கவுன்சிலர்கள் மனு!

திருப்பூர், ஜன.15–

திருப்பூர் மாநகராட்சியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அதிமுக கவுன்சிலர்கள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டம்நடத்திமாமன்றகூட்டத்தினை மாதக்கணக்கில் நடத்தாமல் இருப்பதை கண்டித்து மனு அளித்தனர். திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 60 வார்டுகளில் அடிப்படை பிரச்சினைகளான பாதாள சாக்கடை, குடிநீர் சப்ளை, போர்வெல் மூலம் தண்ணீர் சப்ளை, குப்பை அகற்றும் பணி, சாலைகள் சீரமைப்பு, தெரு பராமரிப்பு, கழிவு நீர் கால்வாய் சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகள் தாமதமாகவும், ஒரு சில பணிகள் ஆரம்பிக்காமல் கிடப்பில் போடப்பட்டு இருப்பதாகவும் இதனை விரைவாக மேற்கொள்ள வலியுறுத்தி மாநகராட்சி எதிர்க்கட்சித்தலைவர்அன்பகம்திருப்பதி, எதிர்க்கட்சி கொறடா கண்ணப்பன் ஆகியோர் தலைமையில் அதிமுக கவுன்சிலர்கள் மாநகராட்சி ஆணையரிடம் மனு அளிக்க வந்தனர். ஆனால், ஒரு மணி நேரத்துக்கு மேலாகியும் ஆணையரை சந்திக்க முடியாததால் ஆணையர் அலுவலகத்தின் கீழே தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி கூறுகையில், மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில் ஏராளமான பிரச்சனைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளது அவற்றை உடனடியாக செயல்படுத்த கோரி மாநகராட்சி ஆணையரை சந்திக்க வந்துள்ளோம் ஆனால் ஒரு மணி நேரம் ஆகியும் மாநகராட்சி ஆணையரை சந்திக்க முடியவில்லை மேலும் மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் மாநகராட்சி கவுன்சிலர்கள் அமர்வதற்கு கூட அறைகள் இல்லை, எனவே தான் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளிலும் சாலைகளில் குப்பைகள் நிறைந்து காணப்படுகிறது குப்பை பிரச்சனை குறித்து நாங்கள் போராடினால் போலீசாரை வைத்து கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் ஆனால் அவர்கள் கட்சி எம்எல்ஏ செய்தால் கைது நடவடிக்கை இன்றி குப்பையை உடனே சுத்தம் செய்கிறார்கள். அவரை கைது செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் எம்எல்ஏ அல்லது முதல்வரே வந்து அமர்ந்து குப்பைகளை அகற்றினால் எங்களுக்கு சந்தோசம் தான் என்றார். தொடர்ந்து ஆணையரிடம் மனு அளித்தனர். அப்போது மாமன்ற கூட்டத்தினை மாதக்கணக்கில் நடத்தாமல் இருப்பதை நடத்த வேண்டும் என்றும், பல்வேறு கோரிக்கைகளையும் வலியுறுத்தினார்கள். இதில் மாமன்ற உறுப்பினர்கள்தங்கராஜ், சேகர், சின்னசாமி, சகுந்தலா, தமிழ்ச்செல்வி கனகராஜ், தமிழ்ச்செல்வி முத்துகிருஷ்ணன், தனலட்சுமி, இந்திராணி, சாந்தி பாலசுப்பிரமணியம், புஷ்பலதா, கழக நிர்வாகிகள் கண்ணபிரான், நாச்சி முத்து, தம்பி சுப்பிரமணியம், ஈஸ்வரன், முத்துகிருஷ்ணன் உள்பட பலர் உடனிருந்தனர்.



## ஊத்தங்கரையில் இன்று கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில் பொதுமக்களுக்கு ரூ.3 ஆயிரம் ரொக்கத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு!

### உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!!

ஊத்தங்கரை ஜன.15

கிருஷ்ணகிகு மாவட்டம் ஊத்தங்கரையில் இன்று கூட்டுறவு உற்பத் தியாளரை விற்பனை சங்கத்தில் தமிழக அரசின் அனைத்து அரிசி குடும்ப தாரர்களுக்கு ரூ 3000 ஆயிரம் ரொக்கம், பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்ககங்களின் இணை பதிவாளர் கே.நடராஜன் வரவேற்பு உரை ஆற்றினார்,

நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத்,பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலை வகித்தவர். நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் ச.தினேஷ்கு மார் தலைமை வகித்தார், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ 1000 ரொக்கம் மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி பேசியதாவது மாவட்டத்தில் 8,70 இலட்சம் மேல் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கப் பட்டு உள்ளது.

அரசு பொறுப்பு ஏற்ற தில் 63 ஆயிரம் புதிய அட்டை இருந்து மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் 85 ஆயிரம் இலவசவீட் டுமனை பட்டாக்களை மாவட்டத்தில் முதல்வர் அவர்கள் வழங்கி உள்ளார், கலைஞர்களவு திட்டத்தில் மாவட்டத்தில் 18கோடியில் 7341 பயனிகளுக்கு விடுகள் கட்டி கொடுக்கப்பட்டு

வருகிறோம். பேசினார் நிகழ்ச்சியில் மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் டாக்டர் மாலதிநராயணசாமி, தமிழ்நாடு நுகர் பொருள் வாணி கழகம் மண்டல மேலாளர் தணிகாசலம், மாவட்ட வட்ட வழங்கள் அணுவலர்தோராணி பேரூராட்சி தலைவர் பா.அமானுல்லா, துணை பதிவாள் சிவகுருநாதன்,திமுக ஒன்றிய கழக செயலாளர்கள் மூன்றம்பட்டி குமரேசன், எக்கூர் செல்வம்.ரஜினி செல்வம். நரசிம்மன், மாவட்ட அவை தலைவர் நாகராஜன், நகர செயலாளர் தீபக் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காத்தி, ஒன்றிய துணைச் செயலாளர் சென்னை செட்டி உட்பட் பலர் கலந்து கொண்டனர்.



### ஈரோடு மாநகராட்சியில் சமத்துவப் பொங்கல் விழா:

## பணியாளர்களுடன் இணைந்து பொங்கலிட்டு கொண்டாடிய ஆணையாளர் அர்பித் ஜெயின் ஐஏஎஸ்!

ஈரோடு,ஜன.15

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் இன்று சமத்துவப் பொங்கல் விழா மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஐஏஎஸ்., விழாவினை சிறப்பித்தார். சமத்துவப் பொங்கல் கொண் டாட்டம்

விழாவின் தொடக்கமாக, மாநகராட்சி அலுவலக வளாகத்தில் பாரம்பரிய முறைப்படி மண்பானையில் மஞ்சள் மற்றும் இஞ்சி கொத்துகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டது. பின்னர், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஐஏஎஸ் அவர்கள், பணியாளர்களுடன் இணைந்து தீ மூட்டி புதுப்பானையில் பச்சரிசி மற்றும் வெல்லம் இட்டு பொங்கலிட்டார். பானையில் பொங்கல் பொங்கி வரும் வேளையில், அங்கிருந்த அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் "பொங்கலோ பொங்கல்" என்று உற்சாக முழக்கமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த விழாவில் மாநகராட்சி அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் என அனைவரும் ஜாதி, மத பேதமின்றி சமத்துவமாக கலந்துகொண்டனர். பொங்கல் தயார் செய்யப்பட்ட பிறகு, சூரிய பகவானுக்கு படைக்கப்பட்டு அங்கிருந்த அனைவருக்கும் இனிப்புகள் மற்றும் பொங்கல் வழங்கப்பட்டது. ஆணையாளர் அவர்கள் பணியாளர்களுடன் சகஜமாக உரையாடி, தனது பொங்கல் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

அரசு அலுவலகத்தில் இத்தகைய பாரம்பரிய கொண்டாட்டங்கள் நடத்தப்படுவது பணியாளர்கள் இடையே ஒற்றுமையையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்தது.



சேலம் அயோத்தியபட்டினம் மாசி நாயக்கன்பட்டியில் உள்ள, வைசியா கல்லூரியில், இன்று சமத்துவ பொங்கல் விழா மிகவும் கோலகலமாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் வெங்கடேசன், கல்லூரி தலைவர் சிவானந்தம், சேலம் ராமகிருஷ்ணா மிஷன் செயலர் யாத்மானந்தர், இன் பேண்ட் சர்ச் பாதர் ஜோசப், ஜான் ராபர்ட், இஸ்லாமிய பெருமக்கள் ஆசிக் உசேன், அப்துல் காதர், அபுதாகிர் உள்ளிட்டோர். கலந்து கொண்டு சமத்துவ பொங்கலை வைத்தனர். பின்னர் மாணவ மாணவிகளுக்கு, மெஹந்தி போடுதல், சட்டி உடைத்தல், கோலப்போட்டி, இசை நாற்காலி, கயிறு இழுத்தல், சிலம்பாட்டம், காவடி ஆட்டம், உள்ளிட்ட பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, பொங்கல் விழாவின் சிறப்பு அழைப்பாளர்கள் பரிசுகளையும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி மகிழ்வித்தனர். இந்த நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், நிர்வாகிகள், ஊழியர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு, மகிழ்ச்சியுடன் சமத்துவ பொங்கல் திருநாளை கொண்டாடி மகிழ்ந்தனர்.

## ஊட்டமலை அரசு மேல்நிலை பள்ளியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு!



பென்னாகரம், ஜன.15

தர்மபுரி மாவட்டத்தில் போதையில்லா மாவட்டமாக உருவாக்க போதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறுபகுதிகளில்மாவட்டகாவல்கண்காணிப்பாளர் மகேஸ்வரன் உத்தரவின் பேரில் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர் அதன் தொடர்ச்சியாக பென்னாகரம் துணை காவல் கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன் அறிவுறுத்தலின்படி ஒகேனக்கல் காவல் ஆய்வாளர் முரளி மேற்பார்வையில் ஒகேனக்கல் அருகே உள்ள ஊட்டமலை கிராமத்தில் செயல்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு போதை பொருள்தடுப்பு மற்றும் பெண் பிள்ளைகள் பாதுகாப்பு குறித்து ஒகேனக்கல் காவல் உதவி ஆய்வாளர் பரமேஸ்வரன் தலைமையிலான காவல்துறையினர் ஒன்றிணைந்து போதை பொருள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த விழிப்புணர்வில் ஒகேனக்கல் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சோமு, காவலர்கள் கிருஷ்ணன், பாலாஜி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் பாலாஜி, உதவி தலைமை ஆசிரியர் அறிவழகன் ,ராமசாமி, ஆசிரியர் கருணாமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்முத்தையன், பள்ளி மேலாண்மைகுழுதலைவி அஞ்சலி, மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.

## ஊட்டமலை அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் வழுங்கும் நிகழ்ச்சி!



பென்னாகரம். ஜன.15

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதி கூத்தப்பாடி ஊராட்சி ஊட்டமலை கிராமத்தில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது ஊட்டமலை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பாலாஜி தலைமை தாங்கினார் இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக பென்னாகரம் திமுக மத்திய ஒன்றிய பொறுப்பாளர் பச்சியப்பன் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள்கள் வழங்கினார். இந்த நிகழ்வில் உதவி தலைமை ஆசிரியர் அறிவழகன், ராமசாமி, மற்றும் ஆசிரியர்கள் கருணாமூர்த்தி, அருண்குமார் சக்தி சின்னசாமி, தலைவர் முத்தையன், தலைவி அஞ்சலி,மற்றும் முன்னாள் ஒன்றிய செயலாளர் மடம் முருகேசன் , மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சின்னசாமி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அமைப்பாளர் போர் ராஜ், மாவட்ட மீனவர் அணி தலைவர் மிதுன் காளியப்பன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராமகிருஷ்ணன், கிளைச் செயலாளர் ராமமூர்த்தி , மகளிர் அணி கீதா , ஒன்றிய நகர மாணவரணி அருள், கிளைச் செயலாளர் மோகன், அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் மோகன், தேமுதிக பேரூர் கழக செயலாளர் ஒசூர் பெருமாள், தேமுதிக கிளை செயலாளர் பாபு, ஒன்றிய அயலக அணி அமைப்பாளர் காவேரியப்பன் மற்றும் ஆசிரியர்கள் கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் ராமலிங்கபுரம் பகுதியில் உள்ள, ஏ வி எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இன்று சமத்துவ பொங்கல் திருவிழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் கல்லூரி நிறுவனர் ராஜ விநாயகம் தலைமையில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி ஆடை அணிந்து, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்துடன் பொங்கல் திருவிழாவை கொண்டாடினர். முன்னதாக மாணவ மாணவிகள், கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. பின்னர் எட்டு ஜல்லிக்கட்டு காளைகள் கல்லூரிக்கு வரவழைக்கப்பட்டு, தமிழகத்தில் பாரம்பரிய முறைப்படி அவைகளுக்கு உணவளித்து, மாலை அணிவித்து கல்லூரி நிர்வாகம் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. இந்த சமத்துவ பொங்கல் திருவிழாவில், கல்லூரி முதல்வர், தாளாளர், நிறுவனர், பேராசிரியர் மற்றும் பேராசிரியைகள், கல்லூரி ஊழியர்கள் என ஏராளமானோர் மனமகிழ்ச்சியுடன் உற்சாகத்தோடு, இந்த சமத்துவ பொங்கல் திருவிழாவை கொண்டாடினர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

## ஜனவரி 16,26-ந் தேதிகளில் மதுக்கடைகள் மூடல்!

### கலெக்டர் அறிவிப்பு!!



கிருஷ்ணகிரி,ஜன.15

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்கூறியிருப்பதாவது: வருகிற 16–ந் தேதி திருவள்ளுவர் தினம் மற்றும் 26–ந் தேதி குடியரசு தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மதுபான கடைகளும் மூடப்படுகிறது. அன்று விதிமுறைகளை மீறி மது விற்பனை செய்தாலோ, கொண்டு சென்றாலோ சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## ஈரோட்டில் களைகட்டிய சமத்துவப் பொங்கல்: பறை இசைத்து சிலம்பம் ஆடி அசத்திய மாவட்ட ஆட்சியர்

ஈரோடு,ஜன.15

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சமத்துவப் பொங்கல் விழா இன்று மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வழக்கமான அரசு நடைமுறைகளைத் தாண்டி கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகள் களைகட்டின. விழாவின் சிகர நிகழ்வாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவியான பறையை கையில் எடுத்து அதிரடியாக இசைத்து நடனமாடியது அங்கிருந்தோரை வியப்பில் ஆழ்த்தியது.அதனைத்தொடர்ந்துவீரக்கலையான சிலம்பாட்டத்திலும் தனது திறமையை வெளிப்படுத்தி ஆட்சியர் அசத்திய நிலையில் அங்கிருந்த அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே பலத்த கைதட்டலையும் வரவேற்பையும் பெற்றது. இதனைத் தொடர்ந்து ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்கள் அலுவலக வளாகத்தில் வண்ணமயமான கோலங்களை இட்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். மேலும் மாவட்ட நிர்வாகம் சார்பில் பணியாளர்களுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் நிறைவாக மங்கல இசை முழங்க புதுப்பானையில் சர்க்கரைப் பொங்கல் வைக்கப்பட்டு "பொங்கலோ பொங்கல்" என உற்சாக முழக்கமிட்டு அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

பின்னர் அனைவருக்கும் கரும்பு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. அரசுப் பணியிடத்தில் நிலவும் பணிச்சுமையை மறந்து உயர் அதிகாரிகளும் பணியாளர்களும் ஒரு குடும்பமாக இணைந்து கொண்டாடிய இந்த பொங்கல் விழா ஈரோடு மாவட்ட மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



தருமபுரி மாவட்டம் , தருமபுரிஒன்றியம் அரசு உயர்நிலைப்பள்ளி பள்ளக்கொல்லை பள்ளியில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் மூலம் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு சிலம்பம் தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டது பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதற்கு தற்காப்பு கலை மிகவும் அவசியம்.இதற்காக சிலம்பம் தற்காப்பு பயிற்சியை பள்ளிக்கல்வித்துறையின் வழிகாட்டுதலின் படி வாரம் இரண்டு வகுப்புகள் வீதம் மூன்று மாதங்கள் 24 வகுப்புகள் சிலம்ப பயிற்சி அளிக்கப்பட்டது. சிலம்பம் பயிற்சியாளர் முருகன் மாணவிகளுக்கு பயிற்சியை வழங்கினார் 6ஆம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.சிலம்பம் பயிற்சியின் நிறைவு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில்பள்ளிதலைமைஆசிரியர்மற்றும்ஆசிரியர்கள்கலந்துகொண்டுமாணவிகளை பாராட்டி ஊக்குவித்தனர் இத்தகைய தற்காப்பு பயிற்சி மாணவிகளின் தன்னம்பிக்கையை உயர்த்துவதோடு உடல் மற்றும் மன வலிமையை வளர்க்கும் என ஆசிரியர் தெரிவித்தனர்



சமத்துவ கூட்டுறவு பொங்கல் விழா நீலகிரி மாவட்டம் உதகை வட்டத்தில் அமைந்துள்ள தொட்டபெட்டா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பாக சமத்துவ கூட்டுறவு பொங்கல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. தொட்டபெட்டா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் உறுப்பினர்கள் கோலம் மற்றும் பொங்கலிட்டு அனைவருக்கும் பகிர்ந்தளித்தனர்.




தாராபுரம் விவேகம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு விழா நடைபெற்றது. பள்ளியில் பேண்டு வாத்தியக்குழு, என்.சி.சி தரைப்படை, சாரணர்படை, சாலை பாதுகாப்பு மாணவர் படை, செஞ்சிலுவை சங்கம், தேசிய பசுமைப்படை, சேம்பியன்ஸ், ஜகான்ஸ், லெஜண்ட்ஸ் மற்றும் வாரியர்ஸ் மாணவ அணியினர் அணிவகுப்பு நடத்தினார். இவ்விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ரகுகுமார் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு ஒலிம்பிக் தீபம் ஏற்றினார்.இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 100 மீ, 800 மீ, 4 × 100 மீ தொடர் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தடகள விளையாட்டு வீரரும் பயிற்சியாளருமான Dr. நல்லுசாமி அன்னாவி பரிசளித்துப் பாராட்டினார்.இசைக்குழு மாணவர்களின் இசைநிகழ்ச்சி, மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் வரவேற்பு நடனம், உழவர் நடனம், பென்குயின் நடனம், கர்பா நடனம், சிலம்பம், ஏரோபிக்ஸ், வெரைட்டி நடனம் மற்றும் வேல் ஆட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.இவ்விழாவில் பள்ளியின் தாளாளர் சுப்ரமணியன், செயலாளர் பூபதி, அறக்கட்டளை உறுப்பினர்கள் கனகராஜ், நடராஜன், விஜயகுமார், முதல்வர் அல்லிராணி உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர்.